புதிய அவையம்

PUTHIYA AVAIYAM
(PEER – REVIEWED JOURNAL)
ISSN :2456-821X
Vol. 08, Issue 02, January 2025

# பத்துப்பாட்டில் செங்கோலும் வெண்குடையும்

முனைவர் க. மோகன்காந்தி
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் - 635 601

## முன்னுரை

சங்க காலம் தொட்டுத் தமிழகத்தை ஆட்சிப்புரிந்த தமிழ் வேந்தர்கள் நிலையான, நேர்மையான, நீதி தவறாத ஆட்சியை மேற்கொள்வதை அறமாகப் பாவித்தனர். அற ஆட்சியின் அடையாளமாகக் கையில் செங்கோலும், தலைக்கு மேல் வெண்கொற்றக் குடையையும் நல்லாட்சியின் குறியீடுகளாகக் கொண்டு நல்லாட்சி நடத்தினர். தன் கையில் இருக்கும் செங்கோல் ஒருபோதும் யாருக்காகவும் வளையாமல் நீதியின் பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்று எண்ணினர். அதற்காக முழு மூச்சாக நல்லாட்சி செய்ய முற்பட்டனர்.

செங்கோலுக்கு இணையாகக் கையிலுள்ள வெண்குடை (வெண்கொற்றக் குடை) மதிப்புடையது. தன்குடி வாழுநர்க்கு நிழலை (மகிழ்வு)த் தந்து, மக்களுக்கு ஒரு துன்பமும் வாராது நிழல் செய்வது வெண்குடை ஆகும். சங்கப் பாடல்களின் ஒரு பகுதியான பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள செங்கோல் மற்றும் வெண்குடையைக் கருபொருளாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## 1.செங்கோல்

பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களில் செங்கோல் இடம் பெற்றுள்ளது.

செங்கோல், வெண்குடை பெருவேந்தர்களின் நல்லாட்சியில் குறியீடுகளாகும். இளஞ்சேட்சென்னி என்னும் சோழ வேந்தனின் மகனான கரிகால் பெருவளத்தான் தாயின் கருவில் இருக்கும் போதே தாயம் (அரசுரிமை) எய்தியவன். இவன் பகைவர்களை வென்றவன், போர்க்களத்திலே முருகனைப் போல் வெற்றியையும் சீற்றத்தையும் உடையவன் என்று புகழும் புலவர் முடத்தாமக் கண்ணியார், தன் குடிமக்களுக்குச் செங்கோலாட்சியை நடத்தும் அறம் தவறாத சிறப்புடையவன் என்று கரிகாலனைப் புகழ்வது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனை,

**“அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்**
**அன்னோன் வாழி வென்வேற் குரிசில்"**[1]

இப்பாடலடிகள் வேந்தர்கள் தன் குடிமக்களிடம் சிறந்த அன்பையும், சிறந்த ஆட்சியையும் செங்கோல் வழிச் செலுத்தல் வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

பெரும்பாணாற்றுப்படை என்னும் நூல் தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசன் மீது பாடப்பட்டது. இந்நூலைப் பாடிய புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் இம்மன்னனின் புகழை இவ்வாறு புகழ்கிறார்.

**"மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்**
**முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்**
**இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்**
**வலம்புரி யன்ன வசை நீங்கு சிறப்பின்**
**அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்**
**பல்வேற் திரையன் படர்குவி ராயின்"**[2]

தமிழ் மரபில் சிறந்து விளங்கிய மூவேந்தர்களைப் போல வீரனாகப் புகழப்படுபவன் இளந்திரையன். இவன் கடலில் கிடைத்தற்கரிய வலம்புரிச் சங்கைப் போன்றவன். இவன் அரசியல், அதிகாரம், மக்களிடையே நேர்மையான ஆட்சி உள்ளிட்டவற்றில் சிறந்து விளங்கியதால், இம்மன்னனின் நல்லாட்சியைப் புலவர் **'அறம்புரி செங்கோல்'** (நன்முறையில் நாட்டை ஆண்ட திரையன்) என்று புகழ்கிறார்.

செங்கோல் என்பது பெருவேந்தர்களுக்கு மட்டுமல்ல குறுநில மன்னர்களுக்கும் உரியது என்பதை பெரும்பாணாற்றுப்படை வழி ஏற்கலாம்.

## 2. வெண்குடை

சிறுபாணாற்றுப்படையில் வேந்தரின் சிறப்புகள் வெளிப்படுகின்றன. அதில் பாண்டிய மன்னனின் சிறப்பை நல்லூர் நத்தத்தனார் புகழும் போது,

**“தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்**
**தென்புலம் காவலர் மருமான் ஒன்னார்**
**மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்**
**கண்ணார் கண்ணிக் கருந்தேர்ச் செழியன்"**[3]

இப்பாடலடிகள் கொற்கை என்னும் கடற்பட்டினத்தின் தலைவன், தென்புலம் முழுமையும் ஆட்சி செய்பவன், அழகிய வேலைப்பாடுகள் உடைய தேரினை

உடையவன், சிறந்த மாலை சூட்டப் பெற்ற வெண்குடைக் கொண்டவன் என்று பாண்டிய மன்னன் புகழப்படுகிறான். இங்கு வெண்குடை என்பது பாண்டிய மன்னனின் நல்லாட்சியின் குறியீடாகக் கொள்ளலாம்.

பாண்டிய மன்னனின் முத்துடைய வெண் குடையைச் சிறுபாணாற்றுப்படைக் கூறுவது போல, நெடுநல்வாடையும் எடுத்துரைப்பது அறியலாம். இதனை,

**"நூல்கால் யாத்த மாலை வெண்குடை**
**தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப**
**நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**
**சிலரொடு திரிதரும் வேந்தன்**
**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"[4]**

இப்பாடலடிகள் பாண்டிய மன்னர்கள் வெண்குடையை முத்தால் அலங்கரித்திருந்தனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும் வெண்குடை வெப்பத்தைப் போக்கி குளிர்ச்சியைத் தருவது மட்டுமல்ல, மழைப்பொழியும் காலத்தில், மன்னன் மேல் நீர்த்துளிகள் படா வண்ணம் பாதுகாத்துள்ளது. இதன் மூலம் மக்கள் - மன்னன் ஆகியோருக்கு வெண்குடை நன்மையையே தரும் என்பதை உணரலாம்.

**முடிவுரை**

சங்ககால அரசர் - மக்களின் நல்லுறவுக்கும், நல்லாட்சிக்கும் செங்கோலும், வெண்குடையும் குறியீடுகளாய் நிற்கின்றன. செங்கோல் வளையா வண்ணம் நேர்மை, நீதி, வாய்மையின் குறியீடாகச் செங்கோல் இருந்திருக்கிறது. வெண்குடை மக்களுக்கு நிழலைத் தந்து காக்கும் சிறப்புடையதாகும். இன்றைய நீதி மன்றங்களில் நீதி தேவதையைப் போல அன்றைய அரசர்களையும், நீதி தேவதையின் கைகளில் இருக்கும் எடைத்தராசு முள்ளின் நேர்மையைப் போல மன்னர்களின் கைகளில் இருந்த செங்கோலையும் உவமைப்படுத்தலாம்.

**சான்றெண் விளக்கம்**


1. சோமசுந்தரனார், பொ. வே, பத்துப்பாட்டு, பகுதி – 1, பாடல் அடிகள் 230 – 231, பக். 101 – 102, கழக வெளியீடு, சென்னை – 18, பதிப்பாண்டு – 2007
2. சோமசுந்தரனார், பொ. வே, பத்துப்பாட்டு பகுதி – 1, பாடல் அடிகள் 32 – 37, பக் -50 – 51, கழக வெளியீடு, சென்னை – 18, பதிப்பாண்டு – 2007
3. சோமசுந்தனார், பொ.வே, பத்துப்பாட்டு பகுதி – 1, பாடல் அடிகள் 62 - 65 ,பக் 18 – 19, கழக வெளியீடு, சென்னை – 18, பதிப்பாண்டு – 2007
4. சோமசுந்தரனார், பொ.வே, பத்துப்பாட்டு பகுதி – 2, பாடல் அடிகள் 184- 188, பக் 84 - 85 கழக வெளியீடு, சென்னை – 18, பதிப்பாண்டு – 2017

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**


1. பத்துப்பாட்டு, பகுதி – 1, சோமசுந்தரனார், பொ. வே, கழக வெளியீடு, 522 டி .டி கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை - 600 0018
2. பத்துப்பாட்டு, பகுதி – 2, சோமசுந்தனார், பொ. வே, கழக வெளியீடு, 522 டி. டி கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை - 600 0018